# உதயதாரகை—MORNING STAR.

PUBLISHED AT MANEPY, CEYLON, TWICE EACH MONTH, AT TWO SHILLINGS A YEAR, PAYABLE IN ADVANCE.

யகம், புத்தகம், சஞ்சிகை சு.] ௲அாடுகம் ௵. பங்குனிமீ ௨௭. ௨., வியர்ழக்கிழமை.—Thursday, March 27, 1851. [Vol. XI. No. 6.



## TERMS OF THE PAPER.

For each copy—*two shillings a year*—PAYABLE IN ADVANCE.

To *Subscribers who receive the Paper by mail*, each copy, *exclusive of postage—four shillings a year.*

The difficulty of remitting small sums from distant places may be obviated by *five subscribers' uniting their subscriptions and remitting them together in a single pound note.*

The names of Subscribers will be published; and *all receipts of money* will be regularly acknowledged on the last page of the Paper.

*Subscribers on the Continent* may receive the paper at *four shillings a year*, their papers having to be sent by mail, and a postage of *one penny*, being *prepaid* on each. This is exclusive of Continental postage.

Agents are requested to receive no subscriptions except in conformity with the above terms.

Advertisements will hereafter be inserted at the rate of 3 shillings a square, and for less than a square 2 shillings. At this rate each advertisement will be published in two successive papers, if so desired by the advertiser.

*All Notices of Deaths and Marriages will be chargeable as Advertisements.*

Communications should be *post paid* to receive attention.

JAFFNA—The Missionaries.
POINT PEDRO—E. L. Layard, Esq.
CATTAVELY—Mr. J. White
TRINCOMALIE—Rev. J. Walton.
COLOMBO—Messrs. P. B. Fernando & Son.
KANDY—Mr. L. Lawton.
TRANQUEBAR—Mr. Jeddidiah Adams.
BATTICALOE—Rev. J. Gillings.
MADURA—Rev. C. F. Muzzy.
ISLE OF FRANCE—Mr. George Coe.


## சுவிசேஷபிரபலவிளக்கம்.

### மோரிசியுஸ் என்னும் தீவிலிருந்து வந்தசெய்தி.

இந்து சமுத்திரத்தில் மோரிசியுஸ் என்று ஒரு சிறுத்தீவு இருக்கின்றது. முன் அது பிராஞ்சித் துரைத்தனத்தாருடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தது. இப்பொழுது அதை இங்கிலீஸ் துரைத்தனத்தார் ஆண்டுவருகிறுர்கள். அதினிமித்தம் பிராஞ்சிக்காரரிலும் இங்கிலீஸ்காரரிலும் அநேகர் அங்கே குடியிருக்கிறதும் அல்லாமல் கறுப்பு மனிதர்களும் மிகுதியாய் இருக்கிறுர்கள். அத்தீவில் கரும்பு நன்றுய் உண்டாகிறபடியால் மிகுதியான சர்க்கரை செய்து விற்கிறுர்கள். அதற்கு அடுத்தவேலை செய்கிறதற்கு முன் ஆபிரிக்கா கண்டலத்திலிருந்து அநேக அடிமைகளை வாங்கிக்கொண்டுவந்து அவர்களைக் குரூரமாய் நடத்தி வேலைகொண்டார்கள். சில வருஷத்துக்கு முன் இங்கிலாந்துதேசத்துத் துரைத்தனத்தார் தங்களைச்சேர்ந்த உவேஷட்டு இந்தீஸ்முதலான இடங்களிலுள்ள அடிமைகளை விடுதலையாக்கினபொழுது இந்தத் தீவில் உள்ள அடிமைகளையும் விடுதலையாக்கினுர்கள். அதுமுதல் அவர்கள் அடிமைகளை வைக்கவும் அவர்களைக்கொண்டு வேலை செய்விக்கவும் கூடாததினுலே இலங்கைத்தீவில் இந்துதேசத்திலிருந்து போகிற பலவகையான சனங்களுக்குச் சம்பளங்கொடுத்து வேலைகொள்ளுகிறதுபோல அத்தீவாரும் கல்குத்தா சென்னைபட்டினம் முதலான இடங்களிலிருந்து வேலை ஆட்களை வரவழைத்துச் சம்பளங் கொடுத்து வேலை நடப்பிக்கிறுர்கள். அப்படியே அநேகர் அத்தீவுக்குப்போய் சிலவருஷம் வரையும் தங்கியிருந்து வேலைசெய்து பொருள் சம்பாதித்துச் சிலர் வீட்டுக்குவந்து சேருகிறுர்கள். அந்த மோரிசியுஸ்தீவில் வேலைக்குப்போகிற கூலியாட்களுக்கு அத்தீவார் அநியாயஞ்செய்யாதபடி இந்துதேசத் துரைத்தனத்தார் பார்த்துவருகிறுர்கள். வேலை கொள்ளுகிறவர்களும் கூலியாட்களைச் சோம்புக்கு இடங்கொடுக்க ஒட்டார்கள்.

நாற்பது வருஷத்துக்கு முன்னே அத்தீவிலுள்ள அடிமைச் சனங்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி ஒரு போதகர் அனுப்பப்பட்டிருந்தார். நாயன்மாரில் அநேகர் தங்கள் அடிமைகளுக்குப் புத்தி போதியாதபடி தடைசெய்தார்கள். சிலர் இடங்கொடுத்தார்கள். அப்படியிருக்கையில் பாவிகளை இரட்சிக்கும்படி கிறிஸ்துஇயேசு உலகத்திலே வந்தாரென்கிற நற்செய்தியை அவர் யாவருக்குங் கூறினுர். அதைக் கேட்டவர்களிற் சிலர் இது மனிதருடையவசனம் அல்ல கத்தருடைய வசனமே என்று நம்பிக் குணப்பட்டதினுலே காலங்தோறும் கத்தருடைய சபையில் சேர்த்துக்கொள்ளப்பட்டார்கள். அத்தீவில் அடிமைத்தன நிவிர்த்தி உண்டானதின் பின்பு அவர்களுக்குள்ளே சுவிசேஷத்தைத் தாராளமாய் அறிவிக்க இடம் உண்டாயிற்று. முன்னிலும் அநேகர் சுவிசேஷத்தை அதிக ஆவலாய்க் கேட்டுவந்ததினுலே ஒருபோதகருடைய பணிவிடைக்கு மிஞ்சியிருந்தது. அவ்வேளையில் அதற்கடுத்த மதகாஸ்கார்தீவின் துரைத்தனத்தாரால் துன்பப்படுத்தப்பட்ட கிறிஸ்தவர்களிற் சிலர் அவர்களுக்குத் தப்பி ஓடி மோரிசியுஸ் தீவில் அடைக்கலமாகப் புகுந்தார்கள். அவர்கள் சத்தியத்தை அறிந்து அதை விளக்கிக்காட்ட ஆவல் உள்ளவர்களாய் இருக்கிறதினுலே அந்தப் போதகருக்கும் அவருடைய மகனுக்கும் உதவியாய் இருக்கிறுர்கள். அவர்கள் பள்ளிக் கூடங்களிலும் செபக்கூட்டங்களிலும் உசாவு துணையாய் இருக்கிறதும் அல்லாமல், வீட்டுக்கு வீடுபோய்ப் பாவிகளுக்குச் சமாதானத்தைக் கொடுக்கத்தக்க சீவமார்க்கத்தைக் குறித்துச் சம்பாஷித்தும் வருகிறுர்கள்.

அங்குள்ள பிரதானபட்டினத்தில் ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறதும் அல்லாமல், அவ்விடத்திலிருந்து சற்றேதூரமாய் மொக்கா என்னும் ஒரு ஊரிலும் ஒரு சபை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. அவ்விடத்திலுள்ள போதகர் தலைமைச்சங்கத்தாருக்கு எழுதினது என்னவென்றுல், கத்தருடைய கை எங்களுக்குள்ளே கிரியைசெய்து வருகின்றது. வாலிபரும் பிராயமுள்ளவர்களுமாகிய ஆண்களும் பெண்களும் இரட்சிக்கப்படுவதற்கு என்ன செய்ய வேண்டும் என்று விசாரிக்கிறுர்கள். அவர்களில் எட்டுப்பேர் பரிசுத்த ஆவியினுல் சென்மிக்கப் பட்டவர்கள் என்று அத்தாட்சி கொடுத்ததினுலே கிறிஸ்து சபையில் சேர்த்துக்கொள்ளப் பட்டார்கள். அதுமுதல் அவர்கள் விசுவாசத்தை இறுகப்பிடித்து உண்மையின் பிரகாரம் நடந்துவருகிறுர்கள். முன் பள்ளிக்கூடத்திற்படித்த சில வாலிபர் எழுப்புதல் அடைந்து தங்களைக் கத்தருடைய சபையில் சேர்த்துக்கொள்ளவேண்டும் எனறு விருப்பமாய்க் கேட்டுக்கொள்ளுகிறுர்கள். அவர்கள் பள்ளிக்கூடத்திலே படித்துவருகையில் அடைந்த நல்லறிவு தங்கள் உள்ளத்தை உருகச்செய்ததினுலே தங்களை முழுவதும் கத்தருக்கு ஒப்புக்கொடுக்கக் கடனுளிகள் என்று நன்றி அறிதலோடே சொல்லிக்கொள்ளுகிறுர்கள். இவர்கள் கத்தருடைய கிருபைக்குள் நிலைத்திருக்கும்படி அவர்களுக்காக நீங்கள் விண்ணப்பஞ் செய்யவேண்டுவதும் அல்லாமல், இந்தப் பள்ளிக்கூடத்திற் படித்த மற்றப் பிள்ளைகளுக்குக் கிருபைஅளித்த பராபரன் அவர்களைக் குணப்படுத்த வேண்டுமென்றும் வேண்டிக்கொள்ளுங்கள்.

சிலநாளுக்கு முன்னே இவ்விடத்திற் சிலபேர் இறந்துபோனுர்கள். அவர்கள் இயேசுநாதரிடத்தில் வைத்த விசுவாசம் மரணத்தறுவாயில் அவர்களுக்கு ஆறுதலையும் சமாதானத்தையுங் கொடுத்தது. அந்தச் செய்தி மற்றவர்களுக்கு எழுப்புதல் உண்டாவதற்கு ஏதுவாயிருக்கிறபடியால் அதைக்குறித்துச் சிலவற்றை இவ்விடத்தில் காண்பிக்கிறேன். இப்படி இறந்துபோனவர்களில் ஒருவன் மொக்கா என்னும் ஊரில் சபை ஸ்தாபிக்கப்பட்ட ஆரம்பத்தில் அதிற் பிரவேசித்தவன. அது முதல் அவன் பரிசுத்தத்தில் வளர்ந்தேறும்படி பிரயாசப்பட்டதினுலே அவனுடைய முடிவு சமாதானமாய் இருந்தது. அவன் சீவனுள்ள அளவும் இயேசுநாதரைத் தனக்கு இரட்சகராக உறுதியாய்ப் பற்றிக்கொண்டான். அவன் வியாதிப்பட்டு அதிக வருத்தமடைந்திருக்கையில் அவனைப் பார்க்கும்படி போனவர்களில் ஒருவன் அவனைநோக்கிச் சிநேகிதனே, மரணமடைய உனக்குப் பயமுண்டோ என்று கேட்டான்? அவன் நான் என் பிதாவின் வீட்டிற் சேர அழைக்கப்படும்பொழுது எனக்குஎன்னபயம்! நான் பிழைத்தாலும் மரித்தாலும் கத்தருடையவனுகவே இருப்பேன் என்றுன். இந்தத் திருவசன வார்த்தைகள் அவனுக்குத் திடநம்பிக்கையைக் கொடுத்ததினுலே மரண அவஸ்தையில் அவனுக்கு ஆதரவும் ஆறுதலுமாய் இருந்தது. அவன் அடக்கம்பண்ணப்பட்ட இடம் பாப்புமார்க்கத்தாருக்கும் எங்களுக்கும்பொது ஸ்தலமானதினுலே அவன் அடக்கம்பண்ணப்பட்ட அன்று பாப்புமார்க்கத்தார் மிகுதியாய்க் கூடிவந்தார்கள். அவனைக் கல்லறையில் வைத்ததின் பின்பு, நான் சனங்களைப்பார்த்து இறந்துபோன இவன் சீவனேடிருக்கையில் கத்தராகிய இயேசுநாதரை உறுதியாய் விசுவாசித்ததினுலே மரண அவஸ்தையில் யாதொரு கலக்கமுமில்லாமல் சமாதானத்தோடே தன் ஆவியை ஒப்புவித்தானென்று சில் புத்திகளைச் சொன்னேன். நான் பேசினவைகளைக் கேட்டுக்கொண்டுநின்ற பாப்பு மார்க்கத்தார் தங்கள் கொள்கைக்கு எதிரிடையாய் இருக்கிறதென்று அவர்கள் எண்ணினதினுலோ மற்றெதினுலோ மிகவும் விசனம் அடைந்து என்னிடத்தில் ஒன்றும்பேசாமல் தங்கள் குருவினிடத்திற்போய் இங்கே வந்திருக்கிற பாதிரி ஒருபிரேதத்தை அடக்கஞ் செய்கையில் நம்முடைய கொள்கையை நிந்தித்துப் பேசினுரென்று சொன்னுர்கள். அந்தக்குரு அதைக்குறித்து ஒன்றும் விசாரியாமல் தங்கள் மேத்திராணிக்கு அதை அறிவித்தார். அவரும் அதை விசாரியாமல் வயிராக்கியங்கொண்டு அதைத் துரைத்தனத்தாருக்குத் தெரியப்படுத்தினுர். துரைத்தனத்தார் நியாயத்தின்படி என்னிடத்தில் விசாரித்தார்கள். நான் நடந்தகாரியத்தை அவர்களுக்குத் திட்டமாய் அறிவித்ததினுலே அந்தப் பிராதைத் தள்ளிவிட்டார்கள்.

நம்முடைய சனங்களுக்குள்ளே வேறொருவன் இறந்துபோனுன். அவன் சத்தியத்தில் வரவழைக்கப்படுமுன் மிகவுந் தாறுமாருய் நடந்துவந்தான். அப்படி இருக்கையில் அவனுக்குக் குரூரமான் வியாதி உண்டாயிற்று. தனக்குச் சீக்கிரமாய் மரணம்வருமென்று அவன் அறிந்து என்னை வரஅழைத்தான் நான் போய் அவன்கிட்ட உளுக்கார்ந்து அவனைப் பார்த்து, உனக்கு இப்பொழுது வருத்தம் உண்டாயிருக்குமே என்றேன். அவன் அதைக்கேட்டு ஐயா, நான் பெரிய பாவி என்றுன். அதற்கு நான் அது மெய்தான், பாவிகளை இரட்சிக்கும்படி கிறிஸ்துநாதர் இவ்வுலகத்தில் வந்தாரே என்றேன். மறுபடியும் அவன், ஆ! நான் மகா துரோகி, இதற்குமுன்னே நான் நரகத்தில் தள்ளப்பட்டாலும் நியாயந்தான் என்று சொல்லி, பின்பு என்தேவனே என்மேல் இரங்கும், இயேசுவே என்னை இரட்சியும், உம்மிடத்தில் வருகிறேன், என்னை இரட்சியும் என்று கூப்பிட்டான். அப்பொழுது அவனுக்கு இரட்சிப்பின் மார்க்கத்தைத் தெளிவாயும் இலேசாயும் எடுத்துக் காட்டினேன். அவன் அதைக் கிரிகித்து அறிந்ததினுலே சற்றே அமைதலாய் இருந்தான். அது முதல் நான் அவனிடத்திற் போக்கும் வரத்துமாய் இருந்தேன். ஒருநாள் அவன் என்னைப்பார்த்து, ஐயா, நான் சிறுவயசாய் இருக்கையில் நான் கேட்டபோதனையின்படியே என் ஆத்துமாவைக் கத்தருக்கு ஒப்புக்கொடாமல் இருந்தது இப்பொழுது எனக்கு மனநோவாய் இருக்கிறது. நான் என் இரிச்சையின்படி நடந்ததினுலே என்னுடைய முடிவும் மற்றவர்களுக்கு முன்பாக எத்தனை இலச்சையாய்த் தோன்றும். ஆயினும் கத்தர் என்னைக் கைவிடவில்லை. அவர் தம்மைச் சேருகிறவர்களை முற்றும் முடிய இரட்சிக்க வல்லமை உள்ளவரென்று அறிந்திருக்கிறேன். இன்னுஞ் சிலநாள் கத்தர் என்னை இவ்வுலகத்தில் வைத்தாராகுல் பாவிகள் அவரிடத்தில் சேருகிறதற்கு எத்தனையோ அதிகமாய்ப் பிரயாசப்படுவேன் என்றுன். பின்னொருநாள் நான் அவனிடத்திற்போய் இயேசுநாதர் தம்முடைய மரணத்தினுல் காண்பித்த அன்பைக் குறித்துப் பேசுகையில், அவன் முகமலர்ச்சியோடே என் அருமையான இரட்சகர் எனக்குக் குணப்படுதலையும் பாவமன்னிப்பையும் தந்திருக்கிறுர். ஆகையால் நான் இங்கேயிருக்கிறதைப்பார்க்கிலும் அவர் சன்னிதியில் சேருகிறதே நல்லது என்றுன்.

இவ்விதமாய் அவன் மெய்யுணர்வு அடைந்திருக்கிறதை இவ்விடத்திலுள்ள கிறிஸ்தவர்கள் அறிந்து அடிக்கடி அவனிடத்திற்போய் அவனுக்குவேண்டிய ஒத்தாசைசெய்து கத்தருடைய வசனத்தை அவனுக்கு வாசித்துக் காண்பித்தும் பராபரன் அருளிச்செய்திருக்கிற வாக்குத்தத்தங்களை ஞாபகப்படுத்தியும் வந்தார்கள். அப்படியிருக்கையில் அவன் இறந்துபோனுன். பின்பு சனங்கள் புலம்பலோடே அவனைக் கல்லறைக்குக் கொண்டுபோய், நித்திய சீவன்அடைய உயிர்த்தெழுவானென்கிற நம்பிக்கையோடே அவனை அடக்கம் பண்ணினுர்கள். அவன் தன்னைச் சத்தியத்தில் வரவழைத்த பராபரனை ஸ்தோத்திரம் பண்ணுகையில் தன் ஆவியை ஒப்புவித்தான் என்று கூடஇருந்தவர்கள் சாட்சி இடுகிறுர்கள்.

சுற்றுக்கிராமங்களிலும் நம்முடைய கிரியை நட

ந்தேறிவருகின்றது. அநேக சனங்கள் கூடிவந்து வணக்கத்தோடே கத்தருடைய வசனத்துக்குச் செவிகொடுத்து வருகிறார்கள். அவர்கள் கூடிவரும்படி தகுதியான இடம் இல்லாததினாலே அவர்கள் நடுவிலே வேறொரு கோவில்கட்ட எத்தனித்திருக்கிறோம். அவர்களுக்குள்ளே விதைக்கப்பட்ட சீவவிதை முளைத்து அதிகபலனைக் கொடுக்கும்படி அவர்களுக்காக நீங்கள் கத்தரைநோக்கி மன்றாடவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன் என்று எழுதினார்.

---

௲௮௱௫௰ம். ஆண்டுக்கு யாழ்ப்பாணம் ரோமானுக்குருவெழுதிய இறப்போடுத்து.

கடைசியான சஞ்சிகையில் நாம் அறிவித்திருந்தபடியே இவ்விறப்போடுத்தின்பேரில் இன்னுஞ் சில கவனிப்புக்களை எழுதி அறிவிக்கிறோம். இந்த இறப்போடுத்தின், ௩௯ம். பக்கத்தில், வட்டுக்கோட்டை வித்தியாசாலையிற் கத்தோலிக்க மாணாக்கர்சேர்ந்து படித்துவந்தார்களென்றும், இனிமேல் குருமார் அவர்களைச் சேர்த்துக்கொள்ளுகிறதில்லையென்றிருக்கிறார்களென்றுஞ் சிலரைச் சேராமல் தள்ளிப்போட்டார்களென்றும் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இவ்விறப்போடுத்தை எழுதினவர் தனது அயலானுக்குவிரோதமாகப் பொய்ச்சாட்சி சொல்லக் கருதினாரென்று நாங்கள் சொல்லவில்லை. ஆனால் இதைக்குறித்துச் சிலர் அவருக்கு மோசமாய் அறிவித்திருக்கவேண்டும். அல்லது அவர் மனோபாவனையாய் எண்ணிக்கொண்டதாய் இருக்கவேண்டும். கத்தோலிக்கருடைய புத்திரரை எங்கள் வித்தியாசாலையில் சேர்க்கவில்லையென்பதுமெய்தான். அதுபோலவே புரோத்தேஸ்தாந்துமதத்தார் புத்திரர்களையும் அஞ்ஞானிகள் புத்திரரையுஞ் சேர்க்கவில்லை. மேற்சொல்லியவித்தியாசாலையில் சேர்க்கப்படும்படி மாணாக்கர் சரியான தகைமையுள்ளவர்களாக இருக்கவேண்டியது. அவர்கள் சேர்க்கப்படுவதற்குமுன் சிலபடிப்புக்களிற் பரிசோதிக்கப்பட்டு, பின் சிலர்மாத்திரந் தெரிந்துகொள்ளப்படவேண்டி இருக்கிறார்கள். ஆகையால் சகல வகுப்பானவர்களுக்குள்ளுஞ் சேர்க்கப்படவேண்டியிருக்கும் அநேகரை நாம் சேராமல் தள்ளிவிட வேண்டியிருக்கின்றது. இவ்விறப்போடுத்தை எழுதினவர், ஒரு பிள்ளையை அவன் கத்தோலிக்கனாய் இருக்கிறதினால் நாம் சேர்த்துக்கொள்ளாமல் தள்ளிவிட்டோமென்று எண்ணுவாராகில் அதுமோசம். இப்படிப்பட்ட கருத்து நம்மில் தோன்றினதுமில்லைத் தோன்றுவதுமில்லை. வட்டுக்கோட்டை வித்தியாசாலையிலே கத்தோலிக்கர்படியாதபடிக்கு அவர்கள் குருமாரே கெடுக்கிறார்கள். அவர்கள் தாங்களே, பெற்றார் பிள்ளைகளை எங்கள் கல்லூரிக்கு அனுப்பாதபடி தடைசெய்துகொண்டு திரும்ப எங்களையுங்குற்றஞ்சாற்றுகிறார்கள். இதெல்லோ கெட்டி.

அக்கியானிகளுடைய சடங்காசாரங்களைப்போலக் கத்தோலிக்கர் செய்கிறார்களென்று புரோத்தேஸ்தாந்து மதத்தாராகிய நாம்அவர்களைக் குற்றஞ்சாற்றும் வேளையில் அவர்கள் தாங்கள் இகழப்படுகிறோமென்று நினைக்கிறார்கள். இக்காரியத்தின் பேரில் புரோத்தேஸ்தாந்து மதத்தாராகிய நாங்களல்ல, ஓர் கத்தோலிக்கக்குருவாகிய, டூபேஸ், என்பவர் சொல்லுஞ்சாட்சியைக் கேட்போமாக. இவர் இந்தியாவின் தென்பகுதிகளில் நெடுங்காலமாக ஒரு மிசியோனரியாக இருந்தார். அவர் உண்டுபண்ணின் ஒரு புத்தகத்திலிருந்து பின்வருங் காரியங்களை அறிவிக்கிறோம். இந்தியாவில் நிலைகொண்டு சனங்களுடைய மனதில் பிடிபடக்கூடியதாயிருக்கும் வணக்கம், புரோத்தேஸ்தாந்து மதத்தார் விக்கிரகாராதனையென்றெண்ணும், கத்தோலிக்க வணக்கமே. எதினாலெனில், அது இவ்வூரவர்களுடைய தன்மைக்கடுத்ததான வேடிக்கை கேடிக்கையுள்ளதாயிருக்கின்றது. கத்தோலிக்கர் செய்துவரும் பூசை, திருவிழா, ஆசீர் தெளித்தல், விரதமனுட்டித்தல், இறந்தார்க்குச் செபஞ்செய்தல், பரிசுத்தவான்களை வணங்குதல்முதலியவை இந்தியருடைய விக்கிரக ஆராதனைக்கே இசைந்ததாக இருக்கின்றது. இவ்வித உபகரணங்களைக் கொண்டு செஸ்சூற்சு என்பவர்கள் அதிக பிரயோசனத்தை அடைந்துகொண்டார்கள். அவர்கள் கன்னிமரியாளுடையவும் இரட்சகருடையவும் சுருபங்களை இரதங்களில் வைத்து நடத்திச் செகனாதர் பூசையைப்போலப் பூசைசெய்து வந்தது மல்லாமல் சபைச் சடங்குகளில் பிராமணற்குரிய சடங்குகளையும் உட்படுத்திக் கடைசியாய் மாரிசத்தினாலும் அதிக தெண்டிமையினாலும் இந்தியாவின் தென்கரையிலிருந்த, பிருன்சீசென்பவர்களையும் மேற்கொண்டு தங்கள் சபைக்குத் திரளான சனங்களையும் பேர்க்கிறிஸ்தவர்களாகச் சேர்த்துக்கொண்டார்கள். மேற்சொல்லிய டூபேஸ் எழுதிய புத்தகத்திலிருந்து நாமெடுத்துச் சொன்ன காரியங்களைக் கத்தோலிக்கக் குருமார் தங்கள் சனங்களுக்கு வாடிக்கையாய்ச் சொல்வதுபோல, புரோத்தேஸ்தாந்தாருடைய புரளியை நம்பவேண்டாமென்று சொல்வது கூடாது.

---

ரோமைநகரின் ரோமான்மதம்.

தாரகையே—இக்காலத்தில், ரோமான்மதத்திற் சேருகிற்வர்களில் அநேகர் மயங்கித் தியங்குகிறார்களென்பது உண்மையான காரியம். அது கிட்டத்தட்ட ஒவ்வொரு கிழமையிலும் நடக்கிறவிபரீதமான காரியங்களினால் அத்தாட்சிப்பட்டிருக்கின்றது. மனிதர் வேதவசனத்தைத் தள்ளி, ரோமைச்சபை என்னும் கேடுபாடான மதத்தை அவர்கள் துணைக்கொள்ளும்பொழுது, மனிதர் எவ்வளவுக்குப் பிரிந்துபோகக் கூடுமென்பதை ஓர் புதினப்பத்திரிகையில் இருந்தெடுத்த பின்னால் வருஞ் சங்கதியை விபரமாய்க் காட்டுவோம். அதாவது,

"இச்செலவு ரோமான் மதத்தைச்சார்ந்த லாட் பீட்லிங் என்பவர் ரோமாநகரைச் சுற்றித் தலதரிசனா யாத்திரைபண்ணி வருகிறார். அவர் சம்பேதுருகோயிலைத் தரிசித்தபோது, அவர் கேள்விப்படி, அப்போஸ்தலருடைய சங்கிலிகளை அவருடைய கழுத்திலும், பிற்பாடு அவர் மனைவியுடையவும், வேலைகாரனுடையவுங் கழுத்திலும் போடுவித்தார். அல்லாமலும், தமது மேம்பாடான வீட்டின் கனத்தை என்றென்றைக்கும் நிலைக்கப்பண்ணும் பொருட்டு ஒரு சுதந்தரவரசு தமக்குக் கொடுக்கப்படுமென்றெண்ணிச் சந்தோவாம்பினோ என்றழைக்கப்பட்ட குழந்தை உருவம்வைக்கிறதற்கு வெள்ளியினால் ஒரு தொட்டிலைச் செய்யவேண்டுமென்று கட்டளைபண்ணினார்."

இதுதான் ரோமான்மதம்! இதுதான் பாப்புமத போதனை! உடம்புக்கேற்ற சிறிது நன்மைகளைத் தனது கடவுளிடம் அடையும்படிக்குக் காணிக்கையுங்கொண்டு கோவிலுக்குப்போகிற குருட்டாட்டமான அஞ்ஞானிக்கும் இந்தப்பெரியவருக்கும் உள்ள வித்தியாசமென்ன? ரோமான் மதத்திற் சேருகிற சகலரையும் பார்த்து "கோஞ்சக் கூழுக்காகத் தங்கள் முதலுரிமைச் சுதந்தரத்தை விற்கிறார்கள்" என்று மெய்யாகவே சொல்லவேண்டியது. இதுகாரியத்தின் உண்மையைப்பற்றி நான் பேசத் தேவையில்லை.

இப்படிக்கு,
சத்தியவசனி.

---

ஓர்போதகருடைய பிரத்தியுத்தாரம்.

திறேச்சன் என்னும் அரசன் (Trajan) பேர்போன ஓர் போதகரை நோக்கி, நீர் உமது தேவன் எங்குமிருக்கிறாரென்றும் உமது சாதியாருக்கு இடையே நிற்கிறாரென்றும் புகழ்ச்சியாய்ச் சொல்லிக் கொள்ளுகிறீர். நான் அவரைக் காணவிரும்புகிறேன் என்றார். அதற்கு அந்தப் போதகர் மறுமொழியாக, மெய்யாகவே பராபரன் எங்குமிருக்கிறார். அழிவுள்ள கண்கள் அவரைக் காணக்கூடாதென்று சொல்ல, இராசாவானவன் தன்தத்துவத்தினால் வற்புறுத்தித் தான் காணத்தான்வேண்டுமெனக் கேட்டான். போதகரானவர் நல்லநும், முதன்முதல் அவருடைய தானாபதிகளில் ஒன்றை நாம் பார்ப்போம் வாருமென்று அந்த அரசனைக் கேட்க, இருவரும் ஒருமனப்பட்டு மத்தியானத்தில் சமனானவெளியிற் சென்றபொழுது போதகரானவர் இராசாவை நோக்கி, இராசாவே, உமது கண்களைத் திறந்து சூரியனை உற்றுப் பாருமென்றார். இராசா அப்படிச் செய்யநேரிட்டும் பின்வாங்கி அதன்ஒளி தன் கண்ணை மின்னுகிறதாகையால் தான் பார்க்கக் கூடாதென்று சொன்னான். போதகரானவர், தேவனுடைய சிருட்டிகளில் ஒன்றின் மகிமையைத் தானும் பார்க்கக் கூடாதாகில் சிருட்டிகருடைய மகா பிரகாசமான ஒளியைப் பார்ப்பதெப்படியென்று சொன்னார்?

---

# உ த ய தா ர கை.

௲௮௱௫௰௧ ௵ பங்குனி ௴ ௨௭௩, வ.

---

## பிரதேசசமாசாரம்.

சீனம்—குவாங்றங்கென்னும் மாகாணத்தில் ௨, கோடியே ௯௰ இலட்சம் சனமுண்டு. கொலைக்கடுத்த குற்றவாளிகளைக் காந்தன்நகரியில்விட்டுக் கொலைபண்ணவேண்டிய கட்டளையுண்டு. வருடமொன்றுக்கு ௩௱. பேர்துவக்கம், ௫௱. பேர்வரைக்கும் உயிர்ச்சேதமடைகிறார்கள். போனவருடம், ௮௱. பேர்கொலைபண்ணப்பட்டார்கள். இவ்வருடத்தில் அதாவது, ௮௱௫௰ம் ஆண்டு, ஐப்பசி௴. ௧ம். தேதியளவுங் கொலையுண்டிறந்தவர்கள், ௨௱௮௰. ஒருநாளையில்மாத்திரம், ௪௯. பேர்சொல்லப்பட்டார்கள். ஒவ்வொருமுறைக்கும் இந்தப்படியிறக்கிறவர்கள், ௰. பேர்துவக்கம், ௨௫. பேருக்குண்டு. இவ்வித ஆக்கினையடையாமல் ஒருமாதமாகுதலிருப்பது பிரயாசம். ஒருகிழமையில் இரண்டுமூன்றுதரங் கொலைத்தொழில் நடக்கும். எவ்விதமாயெனில், குற்றவாளிகளுடைய கைகளைக்கட்டி இராசா இருக்கும் அரண்மனையைப்பார்த்து முழந்தாளில்நிறுத்திவாளைஎடுத்துச்சகலரையும்ஒவ்வொருவெட்டோடேதலையவதாரம்பண்ணுவார்கள். குற்றவாளியானபெண்களைக் குரல்வளையைநெரித்துக்கொல்லுவார்கள். இதுவருடத்திலிரண்டோன்றுநடக்கும். பிதாவையோமாதாவையோகொலைபண்ணினஒருத்தியை நாற்பத்தெட்டுத் துண்டாக வெட்டிப்போட்டார்கள். வேறொருவனுக்கு மூங்கிற்றடியாலடித்துச் சீவனைவதைத்தார்கள். கொலைபண்ணுமுன் வெகுபேருக்கு அடிக்கிறவழமையுண்டு. அந்தப்பகுதியில் நீதவான்கள் விளங்கிக் குற்றவாளிகளுக்குக் கொலைத்தீர்ப்புப்பண்ணுகிறதுமல்லாமல் சமுசியமானவழக்குகளைப்பெரிய இராயரிடமனுப்பி அவர் கட்டளைப்படி செய்கிறார்கள்.

அமேரிக்கா—இதனடுத்துவரும் வைகாசிமாதம் லொந்தோம்நகரியிற்கூடப்படும்வித்தியாடம்பரசங்கத்துக்குப்போகும்படி அயிக்கியதேசத்தில் அநேக சனங்கள் ஆயத்தம்பண்ணுகிறார்கள். வியாபாரிகளுடைய கப்பலிலேறிக்கொண்டு லொந்தோம் நகரிக்குப்போய் அவ்விடத்தில் ஆறுகிழமைதங்கித் திரும்பவும் அமேரிக்காவுக்குப் போகிறவர்கள் ஆளொன்றுக்கு, ௨௰. பவுண் கொடுக்கவேண்டுமென்றும் ஒரு பேச்சுண்டு. மேலும், முதற்றரமான கப்பலேறிப்போகவும், லொந்தோமில் நிற்குமளவும் அக்கப்பலிலேதானே இருந்துகொண்டு சிநேகிதர்களைக் கண்டு அவர்களுக்கு விருந்துகொடுக்கவும் முகாந்திரமாய் நூறுபேர் கூடி ஐயாயிரம்பவுணளவுக்குச் சேர்த்திருக்கிறார்களென்றும் ஒரு கதையுண்டு. இன்னும், வித்தியாடம்பரசங்கந் துறவுபடுத்தி வைக்கப்பட்டபின் நியூயோர்க்குநகரியிலிருந்து நாடோறும் லொந்தோமுக்கு ஒருதவால்த்தோணி அனுப்பும்படியாகவும் ஒழுங்குபண்ணப்பட்டது.

காப்பை—மிகவுஞ் சஞ்சலத்தைக் கொடுக்கத்தக்க சங்கதி காப்பையிலிருந்துவந்தது. என்னவெனில், அவ்விடத்துத் தேசாதிபதியாயிருக்கின்ற சிர்காரி, சிமித் என்பவர் காப்பிரிகளுடன்யுத்தத்தில்சிககிக்கொள்ளப்பட்டிருக்கிறார். அவருடைய இராச்சியத்திற்குக் கீழ்ப்பட்டவர்களாய் வடகிழக்காயிருக்கின்ற சாதிகளெல்லாம் வெளியரங்கமாய் நின்று கலகம்பண்ணுவதே காரியமென்று நிண்ணயம்பண்ணிக்கொண்டு நிற்கிறார்கள். மெத்தவீரங்கொண்டு யுத்தம்பண்ண ஆயத்தமாயிருக்கிறதினால் அவர்கள் கீழ்ப்படுத்தப்பட்டு அல்லது இருதிறத்தவர்களுக்குள்ளுஞ் சமாதானமுண்டுபடமுன் அநேகம்பேர் அழியவும் அதிகம் பணங்கள் சேதம்போகவும் ஏதுவாயிருக்குமென்று நம்பவேண்டியிருக்கின்றது.

போலன்—பிறகிட்ட தைமாதம் முதற்றேதி போலன் தேசத்தடங்கிய எல்லைகளை றூசியர் அழித்துத் தங்கள் இராச்சியபரிவாரத்தை அவ்விடத்தில் முற்றும் நிலைக்க ஏதுப்பண்ணினதினால் றூசியருக்கு விரோதமபண்ணியும் ஒன்றுஞ் சித்தியாகாதென்று போலன்தேசத்தார் எண்ணித் தங்கள் சத்துருத்தனத்தைவிட்டு அமைச்சலாயிருக்கிறார்கள் போலேதெரியவருகின்றது.

சருமானி—கோல்ஸ்றன், சருமானியென்ற தேசங்களில் நேரிட்டிருந்த குழப்பங்கள் இப்பொழுது ஒழிந்துபோயின. பிருன்சுக்காரர் ரோமாபுரியிலிருந்து தங்கள் படைசெனத்தில் ஒரு பகுதியைப் பிரித்தெடுத்திருக்க, ஆஸ்திரியரோ தங்கள் படைகளைப் பாப்புமதவிராச்சியத்தார் காட்டின எதிருத்தரத்துக்கு மாறாக ரோமினா என்னுநகரியில் நிறுத்திவைத்திருக்கிறார்கள்.

எகிப்து—இவ்விடத்துத் துலுக்க தேசாதிபதியாயிருக்கின்ற பச்சா என்வபர் வெகுவெகு தருணங்களில் மோசத்தை வருத்துவிக்கக்கூடிய பேதைமையான காரியங்களைச் செய்ததினால் அவர் மதிமயங்கின பைத்தியகாரன்போலானாரென்றுதெரியவந்தது. ஆனாலும்பிற்பாடு அவர்செய்துகொண்ட காரியங்களினால் அவர்பைத்தியகாரனாய்ப்போகவில்லையென்று விளங்குகின்றது.

---

யாழ்ப்பாணம்—அவமரணம். இந்தமாதம் பதினாலாந்தேதி வெள்ளிக்கிழமைஇரவு வண்ணார்பண்ணையிற் சிவன்கோவிலிற் சப்பறத்தேரிழுபட்டு வருகையில், பதினைந்திருபதுவயதுள்ள ஒருவன் அதின் சில்லின்கீழகப்பட்டு நசுங்குண்டு உடனே இறந்துபோனான்.

# MORNING STAR.

## Jaffna, March 27th, 1851.

REPORT OF THE VICARIATE APOSTOLIC OF JAFFNA, FOR THE YEAR 1850.

According to an intimation in our last number, we now proceed to make a few more remarks upon this Report.

On page 39th, they say—"Catholic pupils had for a time the fortune of getting admittance into this Seminary (at Batticotta;) but it seems now that they are to be admitted no more; at least some have been refused admittance." We will not say that the writer *intended* "to bear false witness against his neighbor," but we will say that either he must have been grossly misinformed, or else he has drawn largely upon his imagination. It is undoubtedly true that the sons of Roman catholics have been refused admission into the Seminary. So have the sons of protestants and of heathens. There are certain qualifications which all must possess in order to gain admittance. There are certain studies prescribed in which all must pass an examination. And even then, only a limited number can be received. We are therefore under the disagreeable necessity of rejecting many applications for admission from all classes. But if the writer of the Report means to intimate that any have been refused admission to the Seminary, or turned out of it, simply because they were Roman catholics, he is entirely mistaken. There has never been any ground for such an insinuation, and we trust there never will be. The greatest obstacles to the education of Roman catholic lads in the Seminary, have always arisen from the priests themselves. They forbid Roman catholic parents to send their sons to us, and then turn round and attempt to throw the odium of not educating catholic lads, upon the conductors of the Seminary. Very consistent conduct truly!

Roman catholics feel greatly injured and insulted when protestants accuse them of imitating the heathen in their rites and ceremonies. Let us hear the testimony, not of protestants, but of one of their own body on this point. The Abbe Dubois was for a long time a distinguished Roman catholic missionary in Southern India. From his able work we make the following quotation upon this subject:

"If any one of the several modes of Christian worship be calculated more than another to make an impression and gain ground in India, it is no doubt the catholic form which protestants consider idolatry. Its external pomp and show are well suited to the genius and disposition of the natives. It has a poojah or sacrifice, processions, images and statues, *tirtan* or holy water, feasts, fasts, and prayers for the dead, invocation of saints, and other practices which bear more or less resemblance to that of the Hindus. Of these facilities and coincidences the Jesuits availed themselves to the utmost; they conducted the images of the Virgin and the Savior on triumphal cars, imitated from the orgies of Juggernath; they introduced the dancers of the Brahminical rites into the ceremonial of the church; and in fine by a system of mingled deception and conformity, and a life of indescribable privation, they succeeded in superceding the authority and the influence of the Franciscans throughout Southern India, and in enlisting multitudes of nominal converts to the church."

Concerning the above quotation from the well known work of the Abbe Dubois, it will be difficult for them to say to their people as they commonly do, "Don't believe it, for it's all a *protestant lie*."

---

ANSWERS TO CORRESPONDENTS.—We have received from an unknown correspondent the first part of a Review of the Report of the Vicariate Apostolic of Jaffna. We regret that on account of the smallness of our paper and length of the Review, it is impossible for us to make room for it.

---

THE BIBLE.—At the commencement of the present century, it is computed that there were in the whole world about 4,000,000 copies of the Bible; whereas, there are now more than 30,000,000! Then, the Scriptures were published in less than 50 languages; now they exist in nearly two hundred languages and dialects! Then, they were accessible in languages spoken by about 2,000,000 men; now, in tongues and dialects spoken by six hundred millions!

---

The answer to the charade, in our last, is, the EYE.

### ROMANISM IN THE UNITED STATES.

A display of "Romanism" as "it is," has been made in Quincy, Ill., which has resulted in the closing of the fine large church recently built there, and also in the flight of the priest, who feared the violent visitation of the popular wrath upon him, if he remained within their reach.

In St. Louis, a large city in the State of Missouri, a Mr. Leahey lectured on the abominations of the confessional, and offered for sale a book of which he is the author, exposing those abominations in simple quotations from Den's Theology, and other standard works of Romanism, bearing the endorsement of the Popish Bishops in the United States.

These lectures and this book were assailed by the political press with great violence (as such politicans are wont to do with all opposition to Romanism, where Catholic votes are to be gained or lost and as they always will do until they are taught with some emphasis that there are other interests besides Popery to be conciliated,) and every abuse was heaped upon their author and his friends, and equal commendation was lavished on the adherents of a system thus arraigned as essentially corrupt Attempts were early made to intimidate the exponent of popish principles by threats of mob violence, and thus to deter him from the dreadful exposure—threats which they soon showed their readiness to execute.

The friends of truth and of free discussion rallied in defence of their rights, and the mob was awed by their firmness and deterred from the commission of personal violence.

But the Protestants were not satisfied with defending the liberty of speech. They wished to know whether it was truth that excited these outrageous demonstrations.

A very large meeting of the citizens assembled to consider the violent proceedings of the Romish mob, and after expressing their views of the methods adopted to suppress investigation, they appointed a large and most respectable committee to visit the Roman Catholic Bishop, and inquire whether in his opinion Mr. Leahey was ever a monk of La Trappe, and whether his statements respecting the confessional were true, and his quotations correctly made.

The Bishop very politely declined receiving the Committee in their public capacity, but as individuals he was very happy to see them. As such, he frankly replied to their quotations that he had no doubt that Leahey had been a monk of La Trappe, and that his quotations from standard Catholic works respecting the confessional, were correctly made, although those works were designed for the priests and "not for the public."

There it is, mark it! Those deluded victims of the Man of Sin had been for days vociferating through the city that the pretended disclosures of Leahey were a lie, that his book was a lying witness, that his lectures and his book were a sink of pollution, and that such audacious mendacity and defamation deserved and should receive the justice of a mob. Tar and feathers were too good for the lying scoundrel, and the most respectable political papers were loudest in condemning the filthy sentiments of the book and the lecture.

When lo! the tumult is hushed. The Bishop says to the gentlemen of the Committee, (whom he cannot receive as a committee, but only as individuals) that the book of quotations is correctly taken from their standard works of theology. Only those books are not for the people but for the priests. Well that is the very thing charged, namely, that their books of theology instruct the unmarried priests in Latin, to propose at the confessional to married and unmarried women and girls, questions so filthy and obscene and licentious and abominable, that when translated into English and published, the publication is fit only for a brothel, and the Bishop says it is a fact, and the quotations are correctly made.

It may well be supposed that when the committee published their report, embodying the above facts, over their signatures and on their responsibility as a committee and as individuals, the effect on the community to the Catholics and Protestants was electrical. Romanism was silenced, and ashamed. How many were led to adopt the following course cannot now be known, but one man went home, and asked his Catholic wife if the priest had ever asked her such questions as had been charged, sternly insisting on a direct answer. She acknowledged that he had. He then sent for the priest, and asked him on his peril the truth respecting the matter. He found that he was exposed and owned the truth, when the justly indignant husband led him to the door, kicked the priest into the street; and declared his intention to kill him if he ever entered his house again.

The amount of similar feeling produced by such decisive evidence, cannot now be ascertained, but it is impossible but that the attachment of many to a church that justifies such a confessional, should be weakened.

*New York Evangelist.*

---

Jealousy violates contracts—dissolves society—breaks wedlock—betrays friends and neighbors—nobody is good, and everybody is doing them or designing them a mischief—it raises either guilt or ill nature, and by reflection it thinks its own fault other men's, as he that is overrun with the jaundice takes others to be yellow.

### THE DOOMED MAN.

There is a time, we know not when,
A point, we know not where,
That marks the destiny of men
To glory or despair.

There is a line by us unseen,
That crosses every path;
The hidden boundary between
God's patience and his wrath.

To pass that limit is to die,
To die as if by stealth;
It does not quench the beaming eye,
Or pale the glow of health.

The conscience may be still at ease,
The spirits light and gay,
That which is pleasing still may please,
And care be thrust away.

But on that forehead God has set,
Indelibly a mark,
Unseen by man, for man as yet
Is blind and in the dark.

And yet the doom'd man's path below
Like Eden may have bloomed;
He did not, does not, will not know
Or feel that he is doomed.

He knows, he feels, that all is well,
And every fear is calmed;
He lives, he dies, he wakes in hell
Not only doomed, but damned.

O! where is this mysterious bourne,
By which our path is crossed;
Beyond which God himself has sworn,
That he who goes is lost?

How far may we go on in sin?
How long will God forbear?
Where does hope end! and where begin
The confines of despair?

An answer from the skies is sent;
"Ye that from God depart!
While it is called to-day, Repent,
And harden not your heart."

---

"SMALL SWEET COURTESIES OF LIFE."—I want to tell you a secret. The way to make yourself pleasing to others, is to show that you care for them. The whole world is like the miller at Mansfield, "who cared for nobody—no not he—because nobody cared for him." And the whole world will serve you so, if you give them the same cause. Let every one, therefore, see that you do care for them, by showing them, what Sterne so happy calls, "the small sweet courtesies of life," those courtesies in which there is no parade, whose voice is too still to tease, and which manifest themselves by tender and affectionate looks, and little kind acts of attention—giving others the preference in every little enjoyment at the table, in the field, walking, sitting or standing. This is the spirit that gives to life its sweetest charms. It constitutes the sum total of all the witchcraft of woman. Let the world see that your first care is for yourself, and you will spread the solitude of the Upas tree around you, in the same way, by the emanation of a poison which kills all the juices of affection in its neighborhood. Such a person may be admired for his understanding and accomplishments, but he will never be beloved.

The seeds of love can never grow but under the warm and genial influence of kind feelings and affectionate manners. Vivacity goes a great way in young persons. It calls attention to the one who displays it; and, if it then be found associated with a generous sensibility, its execution is irresistible. On the contrary, if it be found in alliance with a cold, haughty, selfish heart, it produces no further effect except an adverse one.—*William Wirt.*

---

RAILWAYS OF THE WORLD.—By a work that has been recently published in London, there were in operation at the commencement of 1849, in different parts of the globe, a total length of 18,656 miles of railway, on which a capital of £368,567,000 had been actually expended. Besides this, it is estimated that there were at the same epoch, in progress of construction, a further extent of 7,826 miles, the cost of which, when completed, would be £146,750,000. Thus when these latter lines shall have been brought into operation, the population of Europe and the United States (for it is there only that railways have made any progress) will have completed, within the period of less than a quarter of a century, 26,482 miles of railway; that is to say, a greater length than would completely surround the globe, at a cost of above £500,000,000 sterling. To accomplish this stupendous work, human industry must have appropriated, out of its annual savings, £20,000,000 for twenty-five successive years.

---

QUALIFICATIONS OF A WIFE.—A wife should have *nine* qualifications which begin with the letter P. Piety, perseverance, patience, prudence, patriotism, politeness, persuasion, penetration and portion. That which should be first of all and most of all in consideration, which is *piety*, is now-a-days the least of all, the last of all and with many not at all. That which should be the last of all and least of all in consideration, which is *portion*, is now become the first of all, most of all, and with some all in all.

The Dial-plate of Eternity.—The dial-plate of time measures off the flight of man's days, months, and years, with ceaseless diligence, "till all are fled."

But there is no dial-plate of eternity. How solemn and fearful the thought that when the wheels of time have rolled each man to the end of his journey in this world, his unmeasured duration begins. In reference to the flight of time, Dr. Spring once closed a discourse in the following graphic language:

"I shall never address this audience again. I shall never again meet them, but at the bar of God. That interview seems indeed far distant. But it will be as soon as time, with his eagle wings, shall have finished the little remnant of his short career. "After death, the judgment." We die; but intervening ages pass rapidly over those who sleep in the dust. There is no dial-plate there on which to count the hours of time. No longer is it told by days, or months or years; for the planets which mark these periods are hidden from their sight. Its flight is no longer noted by events perceived by the senses; for the ear is deaf and the eye is closed. The busy world of life, which wakes at each morning and ceases every night, goes on above them, but to them all is silent and unseen. The greetings of joy and the voice of grief, the resolutions of empires and the lapse of ages, send no sound within that narrow cell. Generation after generation are brought and laid by their side; the inscription upon their monumental marble tells the centuries that have passed away; but to the sleeping dead the long interval is unobserved. Like a dream of the night, when, with the quickness of thought, the mind ranges time and space almost without a limit, there is but a moment between the hour when the eye is closed in the grave, and when it wakes to the judgment."

Romanism.—The Bishop of Durham, in a reply to an address from his clergy, draws up a catalogue of the most objectionable points in the papal doctrine, as follows:

1. The claim of the Pope to universal empire over the church of Christ; such a claim not being supported in the smallest degree by the text usually brought forward. (Matt. 16: 18–19.) 2. Transubstantiation, and the refusal of the cup, in the holy communion, to the laity. 3. Divine honors paid to the Virgin Mary, the invocation of saints, and the worship of images 4. The doctrine of purgatory, and the power of a priest to procure relief from its penalties. 5. The grant of indulgences. 6. Restraint upon the use of the Holy Scriptures, amounting to prohibition. 7. The unnatural extent to which celibacy is enforced. 8. The pretence that miracles are even now performed in the Church of Rome. 9. The offering up of public prayers in a foreign tongue, little understood, with a disposition to discourage all education, except on a most narrow and exclusive principle. 10. The most dangerous of all is the confessional, pregnant with evil, moral and civil, social and domestic. The Bishop believes it may be necessary to provide some restrictions upon the introduction and circulation of papal bulls in England, and to prohibit the assumption of episcopal titles conferred by Rome and deriving the name from any place in England and desirable to forbid the existence of monastic institutions, and the residence of any Jesuits in the country.

The Family.—The family! What a holy compact—a constitution organized by Deity—union of hearts and interests. Ofttimes the family circle is so sacred, that the entrance of a kind friend seems like intrusion. It is a little heaven below. Whose silent influences make home so sweet, so sacred a place? The mother. Her peculiar sphere is in her own household; she is to make home happy; to draw around it such attractions, that no allurements from without will be preferred to their own sanctuary. The mother is to secure the confidence of every child, and make it feel that she is its best friend. If the mother realizes her duty, and strives to do it, the child will soon feel that there are mutual obligations.

"Pious mothers have done more to people heaven than any other class of persons next to the preachers of the gospel." When such mothers are no more, then will their children rise up and say, in the language of Cowper:

> "My boast is not that I deduce my birth
> From lons enthroned, and rulers of the earth;
> But higher far my proud pretensions rise
> The son of parents passed into the skies."

The Wrath to Come.—An irreligious young man heard Mr. Whitefield without any interest until the preacher suddenly paused, then burst into a flood of tears, lifted up his hands and eyes, and exclaimed, "Oh, my hearers, the wrath to come!" "These words," said the young man, "sunk deep into my heart, like lead in the waters." I wept, and when the sermon was ended, retired alone. For days and weeks I could think of little else. Those awful words would follow me wherever I went. "The wrath to come." "The wrath to come." The result was, that the young man, soon after, made a public profession of religion, and became an eminent preacher.

Philip Henry said, There are two things we should beware of; that we never be ashamed of the Gospel, and that we never be a shame to it.

## OVERLAND INTELLIGENCE.

The late arrival has brought us but little news of importance. We however select a few items.

Queen Victoria opened the fourth session of the present Parliament, in person, on the 4th February. The day was very fine—the audience large, and the Queen in excellent health. She read the speech with the eloquence for which she is remarkable. She is blamed by some for not speaking of the late papal aggressions in a more decided tone. Lord John Russel has promised to bring forward a measure on this subject which shall extend to the United kingdom. What that measure will be, we shall probably learn by the next mail. Earl Minto distinctly denies having directly or indirectly encouraged the Pope in his recent act of aggression—that the subject was not mentioned to him while he was in Rome either by the Pope or his Cardinals.

Things are becoming more settled and quiet both in Holstein and in Germany. The French have withdrawn a portion of their troops from Rome, and the Austrians keep up theirs in Romagna against the remonstrances of the Papal government.

Berne has been in open insurrection against its ultra liberal Magnates, and peace is only maintained by the Conservative volunteers.

The Poles appear to have given up all hope of successful resistance to the power of Russia. Since the 1st January the territorial limits of Poland have been effaced and complete uniformity of administration pervades the Russian and Polish provinces.

It is said that Mazzini is still in Geneva and has for some time past been actively engaged in the recruiting service of the Revolution. It is affirmed that money is in abundance at his head quarters, and that he is meditating a descent upon some part of the Neopolitan territorities. Garibaldi is expected from New York with two vessels full of Volunteers.

In Vienna, an extensive conspiracy against the Government had been discovered. A general outbreak was fixed for the fourth of March. Seventy persons, students, citizens and officers on half pay have been arrested. Three battalians of the garrison of Vienna have been sent to the provinces.

The insurrection in Turkish Croatia has led to a complete state of anarchy.

In the United States numerous petitions were presented to Congress praying for the repeal of the fugitive Slave Bill. A Bill to establish Penny Postage through the country had passed the House of Representatives by yeas 106 and nays 89.

From the Cape of Good Hope, we have very distressing news. Sir Harry Smith the Governor, is involved in another Kaffir war. All the tribes in the north-east of the Colony are in open and determined rebellion. They fight with the greatest bravery, and many lives and much treasure will probably be lost before they are subdued and peace is restored.

Egypt.—It is reported that Abbas Pacha has fallen into a state of mental imbecility. On many occasions the Viceroy had conducted himself in a manner to create apprehension that his mind was not sound, but a recent act has settled all doubt upon the subject.

America.—Great numbers of people are preparing to go from the United States to attend the great exhibition in London next May. It is said that merchant vessels are to take passengers there and back again at first class prices, for £20 allowing six weeks stay in London. Rumor says that 100 gentlemen have subscribed £5,000 among themselves to hire a first rate vessel for the transit, on board of which they shall reside, receive visits and give entertainments during their stay in London. Also that arrangements have been made for running a packet daily from New York after the opening of the exhibition.

## ROMANISM AS IT IS AT ROME.

*To the Editor of the Morning Star.*

Dear Star:—That many of the recent converts to Romanism have been laboring under a strong "delusion," is a fact which is almost weekly corroborated by the strange circumstances which occur. The following extract from an English paper, will show to what lengths men can go, when they once leave the word of God, and place themselves under the guidance of that monstrous system of corruption, the church of Rome:

"Lord Fielding (a recent convert to popery) is making his round of devotional pilgrimages at Rome. When he visited the church of St. Peter ad Vincula, at his request the *chains of the apostle* were placed upon his neck, and afterwards on that of Lady Fielding, and of the servant man. He has ordered a *silver cradle* to be made for the INFANT STATUE called the Santo Rambino, in the church of Ara Coeli, *in the hope that thereby an heir may be granted to perpetuate the honors of his noble house.*"

And this is Romanism! this is the teaching of the papacy!! Where, I ask, is the difference between a poor ignorant heathen, who, in his blindness, goes to the temple, with his votive offering, to secure from his god some temporal good, and this nobleman? Surely we may say, that those who embrace Romanism, "sell their birthright for a mess of pottage." I leave this fact to speak for itself, and am yours, &c., Veritas.

Priestly Fraud.—The Vienna correspondent of the London Daily News, under date of July 26th, writes thus:

The Catholic priesthood at Schleimback, near Vienna, have been pretending a display of supernatural power in the person of a girl, out of whose hands, feet, and left side, blood is said to flow every Friday as sweat. On her brow are the letters J. N. R. Hundreds of people hasten to Schleimback to cast their mites into the sacred treasury in honor of the new saint. The Courts have investigated the matter, and reported that the whole history of this miracle turns upon a fraud; that the secretion of bloody sweat is accounted for in a most natural manner, and that the initial letters have been produced by chemical agents. Although the fraud has been so clearly proved, the peoples' eyes are not open, nor will the priesthood be brought to punishment.

## SUBSCRIBERS

*For the Morning Star, 1851.*

| | |
|---|---|
| **Batticotta.** | |
| Rev. C. T. Mills | 1 copy |
| Mr. W. Nevins | 1 |
| Mr. D. L. Carroll | 1 |
| Mr. R. Breckenridge | 1 |
| Mr. D. H. Clark | 1 |
| Mr. B. H. Rice | 1 |
| Mr. J. F. Cogswell | 1 |
| Mr. C. Wyman | 1 |
| Mr. A. Lyman | 1 |
| **Jaffna.** | |
| Mr. P. Joseph | 1 |
| The Govt. Agent | 1 copy |
| H. Mooyaart, Esq. | 1 |
| **Colombo.** | |
| The Col. Secretary | 1 |
| **Combaconum.** | |
| Mr. V. S.S. Covilpillay | 1 |
| **Badula.** | |
| Mr. Chas. L. Ferdinands | 1 |
| **Trincomalie.** | |
| J. N. Mooyaart, Esq. | 1 |

## SHIPPING INTELLIGENCE

JAFFNA—Arrivals and Departures.—*March* 7th, 1851.—*Arrived* Schooner Calianaltechimy, Ramopillay from Madras Feb. 27, bound for Jaffna and Colombo, cargo 50 bags coffee and sundries. *Sailed* March 10 for Colombo.

*March* 11.—*Sailed* Schooner Tharnaletchimy, Vastian, for Colombo and Cayilpatam, cargo tobacco bales, passengers 5 natives.

*March* 17.—*Arrived* Brig Valvettitooray from Pt. Pedro March 15, for Jaffna, cargo sugar candy.

POINT PEDRO—*March* 12.—*Arrived* Brig Valvettitooray from Caracal and Nagore March 4 and 10, bound for Pt. Pedro, cargo paddy. *Sailed* March 15 to Jaffna in ballast.

*March* 15.—*Arrived* Schooner Annaletchimy, Deogoopillay from Kaytes March 6, bound for Madras, cargo chanks.

KAYTES.—*March* 10.—*Sailed* Schooner Moheydin box S. Manual, for Negapattam, cargo limestone, passengers 5 natives.

*March* 13.—*Arrived* Brig Virgin Mary from Colombo and Pamban March 7 and 11, bound for Trincomalie, cargo sundries, passengers W. H. Williams, Esq. *Sailed* March 16.

*March* 13.—*Sailed* Schooner Annaletchimy, Drogo for Madras, cargo chanks.

*Sailed* Brig Providence, M. Yanam for Meya, cargo tobacco, passengers 3 natives.

*March* 17.—*Arrived* Brig Ruby, Innasimootoo, from Colombo and Pamban March 11 and 16, bound for Jaffna, cargo sundries, passengers Mrs. Flanderka and 6 children and 14 natives.

*Arrived* Schooner Arthiveraletchimy, Supramanian, from Madras and Valvettitooray March 11 and 16, bound for Colombo, cargo sundries.

*Arrived* Schooner Armido, Sabayapillay from Negapattam March 16, bound for Galle, cargo rice, passengers 2 natives.

## In the District Court of Jaffna.

Testamentary Jurisdiction No. 5,212. } *In the matter of the goods and chattels of the Estate of JOHN MODDER, Esq., late of Jaffna, deceased.*

LETTERS of Administration of the above Estate having been granted by the above Court to Mr. EDWARD MEYER of Jaffna, all persons having claims, being indebted to, or holding property of the said Estate, are hereby requested to prefer their claims, pay their debts, and deliver over such property on or before the 20th of May next, in failure whereof no claims will be attended to, and legal proceedings will be instituted for the recovery of such debts and property.

C. G. KOCH,

*Proctor for the Administrator.*

Jaffna, 20th March, 1851. 3p

## REWARD.

WHEREAS a Double Barrelled Percussion Gun, made by "Haddin of Perth," was stolen on the night of the 4th January last, from Mr. Dunlop's Bunglow at Tanmekenie Estate in the Patchilypalic District, it is hereby announced that whoever will produce the said Gun to Mr. Dunlop at Jaffna, shall receive £3 as a reward. Any party giving information which may lead to the conviction of the thief or thieves shall receive a further sum of £10 sterling.

VELAUDER CANAGASAVAY.

Nellore, 12th March, 1851.

## விளம்பரம்.

பச்சிலைப்பள்ளியைச்சேர்ந்த தன்மக்கேணி என்னுந் தோட்டத்தில், டன்லொப்துரையுடைய வங்களாவிலிருந்து, பிறகிட்ட தைமாதம், நாலாந்தேதி, "Haddin of Perth" என்னும் அட்சரம் வெட்டிய இரணைக்குழல்த்துப்பாக்கியொன்று களவுபோயிருப்பதினால், அந்தத் துப்பாக்கியைக் கொண்டுபோய் டன்லொப்துரையிடங் கொடுக்கிறவர்களுக்கு மூன்றுபவுனும், அத்தை எடுத்த கள்ளவன அல்லது கள்வரைப் பிடித்துக்கொடுத்து அவர்களைக் குற்றவாளியாக்க ஏதுப்பண்ணுகிறவர்களுக்குப் பத்துப்பவுனும் நன்கொடையாகக் கொடுக்கப்படும்.

நல்லூர் ௲௮௱௫௰௧ ௵. பங்குனி, மீ. ௰௨. உ. } வேலாயுதர் கனகசபை.

Printed and Published at the American Mission Press, Manepy, Jaffna, by Thomas S. Burnell.